**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 32/2026 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சொக்கலிங்கம் | த–பெ /க.பெ. | இராமநாதன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 69/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓய்வு (வங்கி மேலாளர்) | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.06.2026**

-----------------------------------------------------------------------------------------------------------

**03.06.2026**

**முதல் விசாரணை:**

**1)** நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

கடந்த 13.08.2024 ல் எதிரி எழுதிக்கொடுத்த **கேட்புகடனுறுதிசீட்டு அசல் ம.சா.ஆ. 1 ஆகும்.** கடந்த 14.08.2024 ல் எதிரி எழுதிக்கொடுத்த கேட்புகடனுறுதிசீட்டு அசல் ம.சா.ஆ. 2 ஆகும். கடந்த 20.08.2025 ம் தேதியிட்ட HDFC வங்கி காரைக்குடி கிளை **காசோலை (காசோலை எண் 000059) அசல் ம.சா.ஆ.3 ஆகும்.** கடந்த 25.09.2025 ம் தேதியிட்ட HDFC வங்கி காரைக்குடி கிளை **காசோலை (காசோலை எண் 000060) அசல் ம.சா.ஆ.4 ஆகும்.** கடந்த 17.10.2025 ல் போதிய தொகை இல்லை என்ற காரணம் கண்டு **திருப்பப்பட்ட ரிட்டன் மெமோ அ.சா.ஆ.5 ஆகும்.** கடந்த 17.10.2025 ல் போதிய தொகை இல்லை என்ற காரணம் கண்டு **திருப்பப்பட்ட ரிட்டன் மெமோ அ.சா.ஆ.6**

**ஆகும்.** கடந்த 08.11.2025 அன்று இது சம்பந்தமாக எதிரிக்கு அனுப்பப்பட்ட **சட்ட அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.7 ஆகும்.** கடந்த 10.11.2025 அன்று எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **ம.சாஆ.8 ஆகும்.** கடந்த 28.11.2025 ல் எதிரிக்கு அனுப்பப்பட்ட **Rejoinder notice அலுவலக நகல் ம.சா.ஆ.9 ஆகும்.** கடந்த 01.12.2025 ல் Door locked. Intimated என்று குறிப்பிடப்பட்டு திருப்பப்பட்ட **அஞ்சலக உறை ம.சா.ஆ.10 ஆகும்.** மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை – (எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் காலம் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.06.03 04:06:08 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.